**மீன்பிடி வெகுமதி நிதியம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மீன்பிடி வெகுமதி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களினதும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்,இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும், வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றின்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத் தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | சுற்றிவளைப்புக் களில் ஈடுபட்டிருந்த உத்தி யோகத்தர்களுக் குச் செலுத்த வேண்டிய படிகள் | 1,658,092 | பட்டோலை கள் | கொவிட் நிலைமை காரணமாக வெகுமதி யாளர்கள் மற்றும் செலு த்த வேண்டிய தொகை களை நிச்சயிக்க முடி யாது போனமையால் விபரமான பட்டோலை | சுற்றிவளைப்பு க்களில் ஈடுபட்டிருந்த உத்தியோகத் தர்களுக்குச் செலுத்த வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | | களை சமர்ப்பிக்க முடியாதுள்ளது. | படிகள் தொடர்பான விபரமான பட்டோலைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு வரை 15 மாவட்ட அலுவலகங்களால் கைப்பற்றப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பட்டியல் | வழக்கு நடவடிக்கைகள் முடிவுற்ற மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான விபரங்கள் மாவட்ட அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்டு புலனாய்வுப் பரிவில் கோவை பராமரிக்கப்படுகின்றது. | தற்போதுள்ள முறைமையுடன் இணங்குதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை நிலவி வருகின்ற பெறவேண்டிய மீன் விற்பனை வருமானமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,526,585 ஆனதுடன், அந்த பெறவேண்டிய வருமானத்திலிருந்து முன்னைய ஆண்டில் மாத்திரம் ரூபா 211,200 அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வருமானத்தை அறவிடுதல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | பெறவேண்டிய மீன் விற்பனை வருமானமான ரூபா 2,143,095 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெற வேண்டிய வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ரூபா | | |
| 1996 இன் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல்வள சட்டத்தின் 59(2) ஆம் பிரிவு | (i) வெகுமதி நிதியத்தின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் நாயகம் பொறுப்புடையவராக காணப்பட வேண்டிய போதிலும், நீர் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப் பட்டிருந்த செயல் நடவடி க்கைத் திட்டங்களில் வெகு மதி நிதியத்தின் பணிகளை இனங்கண்டு | சில அரசுடைமையாக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் எதிர்வு கூறல்களை மேற்கொள்ள முடியாதிருப்பதனால் வெகுமதி நிதியத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட முடியாதுள்ளது. | வெகுமதி நிதியத்தின் பணிகளை இனங்கண்டு அவற்றை பயனுள்ள வகையில் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான திட் டங்கள் வகுக்கப் பட்டு நடைமு |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றை பயனு ள்ள வகையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. | | றைப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | சுற்றிவளைப்புக்களில் பங்கு கொண்ட உத்தியோகத்தர் களிற்கு வெகுமதிகளை வழங்குதல் தாமதிக்கப்படக் கூடாத போதிலும், 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே 271, 348, 488, 427, 327, 604, 536 மற்றும் 692 என்ற வகையில் சுற்றிவளைப்புகள் மேற்கொள் ளப்பட்டிருந்தன. இருப்பினும், 2014, 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் எவ்வித வெகுமதியும் வழங்கப்படாதது டன், 2021 ஆம் ஆண்டில் 08 வழக்குகள் தொடர்பில் செலுத்தியிருந்த வெகுமதி ரூபா 179,985 ஆனமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியன்று செலுத்த வேண்டிய வெகுமதிகள் ரூபா 1,658,092 ஆகும். இதன்படி உத்தியோகத்தர்க ளிற்கு வெகுமதிகளை வழங்குவதற்காக துரித நடைமுறையொன்று தயாரிக் கப்பட்டிருக்காமையால் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கை களை கண்டுபிடிப்பதற்கான ஊக்குவித்தல் இடம்பெறுவ தில்லை என்பது அவதானி க்கப்பட்டது. | 2013 ஆம் ஆண்டு முதல் கடற்றொழில் வெகுமதி நிதியத்தை பெற்றுக்கொள்தல் தொடர்பில் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ள னர். | வெகுமதிகளை செலுத்துவதற்கு துரித நடைமு றையொன்று தயாரிக்கப்படுத ல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 197,872 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 798,616 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 600,744 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 1,248,177 ஆல் குறைவடைந்திருந்தமையே இந்த பின்னடைவுக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 8,970,439 காசு மீதியானது வெகுமதியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் அரசாங்கப் பங்களிப்பு என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்ற போதிலும், செலுத்த வேண்டிய படிகளாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,658,092 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, எஞ்சிய ரூபா 7,312,347 தொகைக்கு உரித்துடைய வெகுமதியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசாங்க வருமானம் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டோரின் பதிவேட்டின் படி, வெகுமதிகளிற்காக இனங்காணப்படாத மீதிகள் காணப்படுமாயின் அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வெகுமதியாளர்களிற்கு வெகுமதி நிதியத்திலிருந்து பணம் செலுத்துகையில் தகவல்களைப் பெறுவதற்கும், வெளிப்படைத் தன்மையுடன் கையாள்வதற்கும் இயலுமான விதத்தில் சோதனையில் பங்கேற்ற அதிகாரிகளின் பெயர், பதவி, வழக்கு இலக்கம், பணம் செலுத்தும் வவுச்சர் இலக்கம், பணம் பெறுபவர்களின் கையொப்பங்கள் போன்றவற்றைக் கொண்ட ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றிவளைப்புகளில் ஈடுபடு கையில் அதற்காக தகவ ல்களை வழங்கியோரின் தகவல்களை எதிர்காலத்தில் பராமரிப்பதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டிலிருந்து அப்பதிவேடு பராமரிக்கப்படுகின்றது. | உத்தியோகத்தர்களை இனங்காணக் கூடிய விதத்தில் பதிவேடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்ட மீன்பிடி அலுவலகங்களின் ஊடாக 692 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்த போதிலும், 3 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களிலிருந்து மாத்திரம் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் வெகுமதி நிதியத்துக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய மாவட்ட மீன்பிடி அலுவலகங்களிலிருந்து வெகுமதி நிதியத்துக்கு வருமானம் கிடைத்திருக்காமை தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நீதி மன்றங்களால் தண்டப் பணம் மாத்திரம் விதித்து முடிக்கப்படுகின்ற வழக்கு களே அநேகம் காணப்படு வதனால் அந்தத் தண்டப் பணங்கள் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதில்லை. | மீன்பிடி அலுவலகங்களிலிருந்து வெகுமதி நிதியத்துக்கு வருமானம் கிடைத்திருக்காமை தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களிற்கான திட்டமிடப்பட்ட சுற்றிவளைப் புகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததுடன், கடற் றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் புலானாய்வுப் பிரிவால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி, 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புகளில் மேற்கொள்ளப் பட்டிருந்த சுற்றிவளைப்புகளின் செயல் முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் மாகாணங்களிற்கிடையே நிலவிய போக்குவரத்து மட்டுப்பாடுகள் கூட்டாக ஒன்றுகூட முடியாமை என்பன காரணமாக எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது போயிருந்தது. | எதிர்பார்த்த இலக்கை அடைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |